# LAABH SAMACHAR

Volume: 09 | Issue : 09 | DECEMBER 2020 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE




SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....



சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536



METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்



# மெட்ரோ ஷூ மார்ட்



16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343

TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer:

## Madurai Pipe

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems



Borewell Submersibles



Single Phase Jet Pumps



Pressure Boosting Systems



Electric Motors



Single Phase Domestic Pumps



Agricultural Monoblocks



Open-well Submersibles

# பர்வதா டிரேடர்ஸ்

செல்: 94439 30728

Manufacturer: PP Woven Bags
Size: 26/41, 28/46, 38/46, 40/42, 45/50, 50/55, 55/66
(All sizes available)
*Uses second hand Woven bags also available



37, கிருஷ்ணாபுரம் காலனி 3வது தெரு, மதுரை - 625014



## Thirumalay Tradings

presents

V Carry Bags

MINIMUM ORDER 100 BAGS.

LOGO PRINTED
MINIMUM ORDER 750 BAGS

To Order: 94438 31496

Plot No.2, Anandha Nivas,
Palanimuthu Nagar,
Villapuram,
Madurai - 625 012. TN. India

* Share in your happiness with your relatives and friends
* Satisfy your customer
* Stylish to carry
* Multipurpose bags



Prop:
S.M. Karthikumaran

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| P.M. Murali | Chairman | 94434 68476 |
| S.K.B. Chandraprakash | Secretary | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

*அவ்கிதெ ஃகோ மொன்னு பொரெ*

## நமஸ்கார்...

நமது சேம்பர் நிர்வாகிகள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. A.G.S. **ராம்பாபு**, சீதாபாய் பர்வதவர்த்தனி அம்மாள் டிரஸ்டி திரு. N.M.R.K. **ஜவகர் பாபு**, காந்தி மெமரியல் மியூசியத்தின் சேர்மன் திரு. T.R. **தினகரன்** ஆகியோர் ஒன்றாக இணைந்து, மதுரைக்கு வருகை தந்த மாண்புமிக தமிழக முதல்வர் திரு. **எடப்பாடி பழனிச்சாமி** அவர்களை ஸௌராஷ்ட்ர சமூக மக்களின் சார்பாக, நேரில் சென்று சந்தித்து மதுரை ரயில் நிலையத்திற்கு சுதந்திர போராட்டத்திற்கு போராடிய **மதுரை காந்தி** திரு. N.M.R. **சுப்பராமன்** அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது.

மதுரைக்கு வருகை தந்த நமது பாரதப்பிரதமர் **நரேந்திர மோடி** அவர்களின் சகோதரரும், பிரதான் மந்திரி ஜன் கல்யாண்காரி யோஜ்னா அமைப்பின் தேசிய தலைவருமான திரு. **பிரகலாத் மோடி** அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்தனர். அவரிடம் சேம்பர் குறித்தும், நமது ஸௌராஷ்ட்ரா சமூகம், தொழில் குறித்தும் பகிர்ந்து கொள்ளப்பட்டது. நமக்குத் தேவையான உதவிகளை அளிப்பதாகவும் தெரிவித்தார்.

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் சிறப்பு அழைப்பாளராக 8 ஆண்டுகளாக இருந்து, சேம்பர் பணிகளை சேவை மனப்பான்மை கொண்டு அற்பணிப்புடன் ஆற்றி வந்த திரு. T.S.S. **நந்தலால்** அவர்களின் மறைவும், சேம்பர் வளர்ச்சிக்கு ஒவ்வொரு ஆண்டும் நன்கொடை வழங்கி வந்த ஆற்றல்மிக்க தொழிலதிபர் திரு. T.K. **ராஜமூர்த்தி** அவர்களின் மறைவும் மிகுந்த மன வருத்தத்தை அளிக்கிறது. இவ்விருவரும் சேம்பருக்கு மிகவும் உதவிகரமாக இருந்தவர்கள்.

அதோடு, நமது ஸௌராஷ்ட்ரா சமூகத்தின் மற்றுமமொரு அடையாளமாக திகழ்ந்து திரு. S.R. **இராதா** அவர்களின் மறைவு நமது சமூகத்திற்கு பேரிழப்பு. நமது சமூகத்திலிருந்து 'ஒருவர் தமிழக சட்டப்பேரவையில் எதிர்கட்சித் தலைவராக இருந்தவர்' என்ற பெருமை உடையவர். அவரின் மறைவு நமது சமூகத்திற்கு பேரிழப்பு.

சேம்பருக்கும், பொது மக்களுக்கும் சமூக சேவைகளை ஆற்றிய இம்மூவரின் ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறேன். அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி — குமரன் B ஜதுவா

## திருக்குறள்

**அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை**
**வியந்தான் விரைந்து கெடும்**

ஸௌராஷ்ட்ர மொழியில்: ஸெர்சிலிர்ஹான் ஸெக்னா ஸ்தி[2] திஜன்னா தென்தெக
மெச்சுல்லய் வேகு[3] மு நஜ்ஜாய்

**பொருள்:** தனக்கு அமைந்துள்ள சக்திகளுக்குத் தகுந்த மட்டில் காரியத்தின் பலத்தை அளந்துகொள்ளாமல் தன்னுடைய பலத்தை அதிகமாக மதிப்பிட்டுக்கொண்டு தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளுகிறவன் விரைவில் கெட்டுப் போவான்.

அதிகாரம் 48 — வலியறிதல் (தனக்குள்ள சக்தியின் அளவை அறிவது) — அரசியல்

# பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

**24.11.2020** – பிரிண்டிங் பை துறையினருக்கான தொழில் சார்ந்த கூட்டம் சேம்பர் அரங்கில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக தி மதுரை பிரிண்டர்ஸ் அஸோசியேசன் தலைவர் திரு. N.K. **நீலகண்டன்** அவர்களும், கௌரவ விருந்தினராக திரு. T.R. **மோகன்ராம்** அவர்களும் கலந்து கொண்டனர். சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சி குழுத்தலைவர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

**25.11.2020** – சேம்பர் சிறப்பு அழைப்பாளர் திரு. T.S.S. **நந்தலால்** அவர்களின் இறுதி அஞ்சலியில் சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**28.11.2020** – திராவிட முன்னேற்றக் கழகத்தின் மதுரை மாவட்டப் பொறுப்பாளர் திரு. **பொன் முத்துராமலிங்கம்** அவர்கள் மரியாதை நிமித்தமாக சேம்பருக்கு வருகை தந்தார். இந்த கூட்டத்தை சேம்பர் ஆயுட்கால உறுப்பினர் **மல்லிகை** திரு. M. **பாலச்சந்திரன்** அவர்கள் ஏற்பாடு செய்தார்.

**29.11.2020** – தமிழ்நாடு மஹா ஸௌராஷ்ட்ர ஸபா, கைத்தறிநகர் கிளை பொறுப்பாளர்கள் பதவியேற்பு விழா & செயல்பாடுகள் துவக்கவிழாவில், சுய தொழில் பயிற்சி மைய திறப்பிற்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-க்கு அழைப்பு விடுத்திருந்தை ஏற்று நிர்வாகிகள் கலந்து கொண்டு தொழில் பயிற்சி மையத்தை திறந்து வைத்தனர்.

**29.11.2020** – நமது சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. G.R. **சுப்பிரமணியன்** அவர்களின் இல்ல திருமண விழாவிற்கு சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி பரிசை வழங்கினர்.

**01.12.2020** – மத்திய அரசின் புதிய தொழிலாளர் சட்டம் 2020 பற்றி கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இது குறித்து பேச, திரு. L.V. **ஜோதிபிரகாஷ்** Advocate / Labour Mngt. Consultant, Mdu. அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். சேம்பர் துணைத் தலைவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழுத் தலைவர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

**02.12.2020** – சேம்பர் ஆயுட்கால உறுப்பினரும், சேம்பரின் நலம் விரும்பியுமான திரு. T.K. **ராஜமூர்த்தி** அவர்களின் இறுதி அஞ்சலியில் சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**04.12.2020** – மதுரைக்கு வருகை தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. **எடப்பாடி பழனிச்சாமி** அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்து, மதுரை ரயில் நிலையத்திற்கு **மதுரை காந்தி** திரு. N.M.R. **சுப்பராமன்** அவர்களின் பெயரை சூட்டக் கோரி மனு அளித்தனர்.

**25.11.2020** – நமது சமூகத்தின் மிக முக்கியப்பிரமுகரும், முன்னாள் அமைச்சருமான திரு. S.R. **இராதா** அவர்களின் இரங்கல் கூட்டத்தில் சேம்பர் நிர்வாகிகள் பங்குகொண்டனர்.

**13.12.2020** – மதுரைக்கு வருகை தந்த நமது பாரதப்பிரதமர் **நரேந்திர மோடி** அவர்களின் சகோதரரும், பிரதான் மந்திரி ஜன் கல்யாண்காரி யோஜ்னா அமைப்பின் தேசிய தலைவருமான திரு. **பிரகலாத் மோடி** அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்து உரையாடினர்.

– K.K. **தினேஷ்**

# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அங்கத்தினர்கள் அனைவருக்கும் 2021ம் ஆண்டு துவக்கம் மற்றும் தைத்திருநாளாம் பொங்கல் திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். 2020ம் ஆண்டு கொரோனா பெருந்தொற்று முடக்கத்தால் பாதிக்கப்பட்ட நம் தொழில் முனைவோர்கள், இந்த 2021-ம் ஆண்டில், அனைவருடைய தொழிலும் புத்துணர்வு பெற்று வளர்ச்சிப் பாதையை நோக்கிய பயணிக்கும் என்று நம்புகிறேன்.

நமது சமுதாய மக்களுக்கு மட்டுமல்லாது, பிற சமுதாய முன்னோடிகள் மற்றும் பொது மக்களிடத்தில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் ஒரு நல்ல பரிச்சயமான மற்றும் நற்பெயரை பெற்ற அமைப்பாக விளங்குவதை காண்கிறேன். இதற்கு நமது சேம்பர் நிர்வாகிகள் மற்றும் சேம்பர் செயல்பாடுகளே காரணமாக கருதுகிறேன். இந்த அமைப்பில் இருக்கும் சேம்பர் உறுப்பினர்கள் அனைவரும், "நான், ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ல் உறுப்பினராக இருக்கிறேன்" என்ற பெருமையை தந்துள்ளது.

நன்றி - B.S. **ஜெனார்த்தனன்**

### சமூக மக்களுக்கான புதிய தொழில் வாய்ப்பு!!!...



நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் முதுநிலைத் தலைவர் திரு. பாலா வெங்கட் குட்டி அவர்களின், புதிய தொழில் முயற்சி, அதாவது, பன்னாட்டு நிறுவனங்களைப் போன்று நமது ஸௌராஷ்ட்ர சமூக மக்களின் தயாரிப்புகள் மற்றும் அன்றாடம் பயன்படும் அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை மையத்தை மதுரை மற்றும் சுற்றுவட்டாரப்பகுதிகளில் தொடங்க இருக்கிறார். அதற்கு, புதிதாக தொழில் துவங்க விரும்புவோர், வேலை வேண்டுவோர், முதலீட்டாளர்கள், வீடு மற்றும் கடை வாடகைக்கு விட விரும்புவோர்கள் இந்த அற்புதமான வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளலாம்.

**இந்நிறுவன செயல்பாடுகள்;**

- மொத்தம் மற்றும் நேரடிக் கொள்முதலை செய்ய உள்ளது.
- கார்ப்பரேட் நிறுவனத்தைப்போன்று ஷோரூம் வடிவமைப்பு.
- ஊடகம் மற்றும் சமூக வளைத்தளங்களில் விளம்பரங்கள்

ஆர்வம் உள்ளவர்கள் சேம்பர் வாட்ஸ் எண்ணிற்கு தங்கள் பெயர் விபரத்தை மட்டும் அளிக்கவும்.

வாட்ஸ்ஆப் எண்: **9344197952**

https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk



https://www.facebook.com/sourashtrachamberofcommerce/videos/691805701481881/



## Business Vertical Meet

ஒவ்வொரு மாதமும் துறை சார்ந்த கூட்டத்தை சேம்பர் நடத்தி வருகிறது. அதன்படி கடந்த 24.11.2020 அன்று, பை பிரிண்டிங் துறை சார்ந்த தொழில் முனைவோர்கள் கூட்டம் சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக தி மதுரை பிரிண்டர்ஸ் அசோஸியேசன் தலைவர் திரு. N.K. **நீலகண்டன்** அவர்களும், கௌரவ விருந்தினராக விக்னேஷ் ஆப்செட் உரிமையாளர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்களும் கலந்து கொண்டு பை பிரிண்டிங் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு தலைவர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.



## சிறப்பு சந்திப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மதுரை மாவட்டப் பொறுப்பாளர் திரு. **பொன் முத்துராமலிங்கம்** அவர்கள் மரியாதை நிமித்தமாக ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகளை கடந்த 28.11.2020 அன்று மாலை சேம்பர் வளாகத்தில் சந்தித்துப் பேசினார். அவரை சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் வரவேற்றார். சேம்பர் ஆயுட்கால உறுப்பினரும், திமுக சார்பில் மதுரை தெற்கு தொகுதியில் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்ட மல்லிகை M. **பாலச்சந்திரன்** அவர்கள் இந்த சந்திப்பை ஏற்பாடு செய்தார்.

அவர், ஸௌராஷ்ட்ர சமூகத்தின் பெருமைகளையும், பொது வாழ்வின் அற்பணிப்புகளையும் மிக அழகாகப் பேசினார். அதோடு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் மற்றும் செயல்பாடுகள் நம் சமுதாயத்திற்கு எவ்வாறு பயனுள்ளதாக இருக்கும் என மிகத் தெளிவாகப் பேசினார்.

சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. **தினேஷ்** அவர்கள் நன்றி நவில, சந்திப்பு இனிதே நிறைவு பெற்றது.



## வாழ்த்துக்கள்

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் செயற்குழு உறுப்பினர் திரு. G.R. **சுப்பிரமணியன்** அவர்களின் இல்ல திருமண விழாவிற்கு சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்து மணமக்கள் G.S. **கார்த்திக் – ஐஸ்வர்யா**–வை வாழ்த்தி நினைவுப் பரிசினை வழங்கினர்.


**WEBSITE FOR SCC MEMBERS AT OFFER PRICE**

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்
உறுப்பினர்களின் தொழில் வர்த்தக வளர்ச்சிக்காக
சிறப்பு விலை ரூ. 365/- ல்
வெப்சைட் உருவாக்கித் தருகிறது.
அனைத்து தொழில் துறை சார்ந்த
அங்கத்தினர்களும் இதில் இணைந்து
தொழில் அபிவிருத்தி செய்து கொள்ளலாம்.

விபரங்களுக்கு: 93441 97952 , 80566 56889





Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

Safety! Security!! Surveillance!!!

A TO Z
CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633


ஒரு மாஸ்க்கை 8 மணி நேரம் மட்டுமே அணியலாம்



https://youtu.be/-JMVniVMLr0

PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care




PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragrace Pvt. Ltd



K.K.Dinakaran

www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831







# NEW LABOUR CODE 2020
# புதிய தொழிலாளர் சட்டத் தொகுப்பு 2020

சமீபத்தில் மத்திய அரசு தற்சமயம் நடைமுறையில் இருந்து வரும் 29 தொழிலாளர் சட்டங்களை ஒருங்கிணைத்து நான்கு சட்டத் தொகுப்புகளாக (Codes) உருவாக்கியுள்ளது. அந்த நான்கு சட்டத் தொகுப்புகளும் (Codes) நடைமுறைக்கு வருவதைப் பற்றி நமது சேம்பர் அங்கத்தினர்கள் அறிந்து கொள்வதற்காக சிறப்புக் கூட்டம் கடந்த 01.12.2020 அன்று மாலை 6 மணி அளவில் சேம்பர் அரங்கில் ஏற்பாடு செய்யபட்டது.

புதிய தொழிலாளர் சட்டத் தொகுப்பு 2020 **New Labour Code 2020** என்ற தலைப்பில் பேச திரு. L.V. **ஜோதிபிரகாஷ்** Advocate & Labour Management Consultant, Madurai அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். சேம்பர் துணைத் தலைவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் இக்கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழுத் தலைவர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

கூட்டம் துவங்குவதற்கு முன்னதாக, நமது சேம்பரில் சிறப்பு அழைப்பாளராக இருந்து பல்வேறு பணிகளை சேவை ஸ்ரத்தையுடன், அற்பணிப்பு எண்ணத்துடன் செயல் புரிந்த திரு. T.S.S. **நந்தலால்** அவர்களின் மறைவிற்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

துணைத்தலைவர் திரு. T.R. **மோகன்ராம்** அவர்கள் மறைந்த திரு. T.S.S. **நந்தலால்** அவர்களின் பெருமைகளை நினைவு கூர்ந்த பிறகு, கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். பின்னர், செயற்குழு உறுப்பினர் திரு. N.S. **பிரேம் குமார்** அவர்கள் சிறப்பு விருந்தினரை மிக அருமையாக கூட்டத்திற்கு அறிமுகம் செய்தார்.

அதனை ஏற்று திரு. L.V. **ஜோதி பிரகாஷ்** அவர்கள் பேசியதாவது, இந்தியாவில் மொத்தம் 3300 சட்டங்கள் உள்ளது. அதில், தொழிலாளர் சட்டம் 111 உள்ளது. இந்த சட்டம் மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் இரண்டின் கட்டுப்பாட்டில் உள்ளது. மேற்கூரிய 111 தொழிலாளர் சட்டங்களில் 29 சட்டங்களை தற்போது 4 சட்டங்களாக நமது மத்திய அரசு தொகுத்துள்ளதாக தெரிவித்தார். அத்தொகுப்புகளை காணொலி காட்சி மூலம் விவரித்தார். அவை,

- **ஊதிய சட்டத் தொகுப்பு,** 2019; (The Code on Wages, 2019)-ன் கீழ் 4 சட்டங்கள்.
- **தொழிலியல் உறவு சட்டத்தொப்புத் தொகுப்பு,** 2020; (The Industrial Relations Code, 2020)-ன் கீழ் 3 சட்டங்கள்.
- **சமுதாயக் காப்புறுதி சட்டத்தொகுப்பு,**2020; (The Code on Social Security, 2020)-ன் கீழ் 9 சட்டங்கள்.
- **வாழ்தொழில் பாதுகாப்பு பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் பணி நிலைமைகளின் சட்டத் தொகுப்பு,** 2020; (The Occupational Safety, Health and Working Conditions Code, 2020)-ன் கீழ் 13 சட்டங்கள் தொகுக்கப்பட்டுள்ளது.

(இந்த விபரங்கள், நமது லாப் ஸமாச்சார்-ன் அக்டோபர் 2020 இதழ்-ன் 19ம் பக்கத்தில் காணலாம்.)

புதிய சட்டத்தில் சிற்சில சட்டங்களை திருத்தியமைத்துள்ளது. மேலும் சில சட்டங்கள் திருத்தியமைக்கவும் உள்ளது. அதாவது, பழைய சட்டத்தில், இ.எஸ்.ஐ. லிமிட் ரூ. 21000/- என்றும், பி.எஃப்-க்கு ரூ. 15000/- என்றும் கூறியுள்ளது. அதோடு, பி.எஃப்-ல் நிறுவனம் மற்றும் அரசின் பங்கு 12% என்று உள்ளது. இப்புதிய சட்டத்தில் இது பற்றிய அறிவிப்பு எதுவும் இடம் பெறவில்லை. மாறுதல்களுடன் இது அறிவிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், தற்போது வரை,

ஸ்ரீ முருகன் துணை
K.S. மோகன்லால்


ஹரிலால்
பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்
குறிப்பிட்ட நேரத்தில் டெலிவரி செய்யப்படும்
98430 72626
98425 72626
• செங்கல்
• மணல்
• ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
• கிராவல்
• கிரஷர் தூசி
• சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
• உடைகல்
No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை - 9

# சல்பா இண்டஸ்ட்ரீஸ்

**வீட்டு உபயோகப் பொருட்கள்**

18–ஏ, வெங்கலக்கடைத் தெரு, மதுரை – 1. போன்: 0452 4250844
63/5, விரகனூர், மகாராஜன் நகர், ராமநாதபுரம் ரோடு, மதுரை – 9.
செல்: 98945 44813

## கீழ்கண்ட வீட்டு உபயோகப் பொருட்கள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

- பினாயில் காம்பவுண்ட்
- டாய்லட் கிளினர்
- சோப் ஆயில்
- வாஷிங் லிக்யூட்
- டாய்லட் கிளீனர் (ஹார்பிக்)
- தரைசுத்திகரிப்பு ஆயில் (லைசால்)
- பாத்திரம் சுத்தம் செய்யும் ஆயில் (ப்ரில்)
- ஹாண்ட் வாஷ் லிக்யூட்
- ஆசிட் சிலர்ரி
- பிளிச்சிங் பவுடர்
- வாஷிங் சோடா
- காஸ்டிக் சோடா
- டிஸ்டில்டு வாட்டர்
- வாஷிங் பவுடர் செட்
- டிடர்ஜண்ட் பவுடர்
- ஒயிட் பினாயில்
- டிஸ்வாஸ் கேக்
- டிடர்ஜண்ட் சோப்ஸ்
- ஓம வாட்டர்
- டினோ பால்
- பாத்ரூம், டாய்லட் சம்பந்தபட்ட பொருட்கள் வாசனை திரவியங்கள் மற்றும் இதர கெமிக்கல்கள்



K.K.Karunakaran
Mobile : 98409 60844
82206 94087
Factory : 98945 44813
























ஆர்கிடெக்ட் திரு. பி.ஆர்.எஸ். சிவக்குமார் அவர்கள் நினைவுப் பரிசை வழங்குகிறார். உடன் சேம்பர் நிர்வாகிகள்

இப்புதிய சட்டத்தில் பெரிய அளவிலான சட்ட திருத்தங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெளிவுபடுத்தினார்.

தொழில்முனைவோர்கள் இது குறித்து கவலைக் கொள்ளத் தேவையில்லை என்று தெரிவித்தார். மேலும், நிறுவனத்தை மூடுவதற்காக முன்கூட்டியே அனுமதி வாங்குவதற்கான பணியாளர்கள் எண்ணிக்கையை 300-ஆக உயர்த்தியிருப்பது சம்பந்தமாக பேசினார். அதில், அரசிடம் இருந்து பெற வேண்டிய முன் அனுமதி மட்டும் தான் நீக்கப்பட்டுள்ளதே தவிர, இதர பலன்கள் மற்றும் பணியாளர்களின் உரிமைகள் அப்படியே தான் உள்ளன என தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் கூறியுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், கொரோனா-19 பெருந்தொற்றில் இ.எஸ்.ஐ.சி., உறுப்பினர்களுக்கு தளர்த்தப்பட்டுள்ள விதிகள் குறித்தும் பேசினார். அதனைத் தொடர்ந்து, மத்திய அரசின் புதிய அறிவிப்பான, 1000க்கும் குறைவான தொழிலாளர்களை கொண்ட நிறுவனங்கள் பி.எஃப்-ல் பெறக்கூடிய புதிய சலுகைகள் குறித்துப் பேசினார். இது சிறிய தொழில் நிறுவனங்கள் பயன் பெறும் வகையில் இருந்தது. இது குறித்த விரிவான தகவல் பக்கம் 20-ல் காணலாம்.

மேலும், பல்வேறு பயனுள்ள தகவல்களை வழங்கி தனது உரையை நிறைவு செய்தார். பங்குகொண்ட அங்கத்தினர்கள் பலர் பயன் பெற்றனர். சிறப்பு விருந்தினர் திரு. L.V. **ஜோதிபிரகாஷ்** அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள் நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தனர்.

இறுதியாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. **தினேஷ்** அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

இந்தக் கூட்டத்தை காணொலி காட்சி மூலம் காண விரும்புவோர். ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் யூடியூப் சேனலிலும், முகபுத்தகத்திலும் காணலாம்.

## முக்கிய அறிவிப்பு

**பட்ஜெட் குறித்த கோரிக்கைகளை** (Pre-Budget Memorandum) மத்திய நிதி அமைச்சகத்திற்கு நேரடியாக சென்று சமர்ப்பிக்க நமது சேம்பர் நிர்வாகிகள் புது டெல்லியிக்கு பயணம் மேற்கொள்ள உள்ளனர்.

நமது சேம்பர் உறுப்பினர்கள் தங்கள் தொழில் குறித்த கோரிக்கைகளை நமது சேம்பர் அலுவலகத்திற்கு கடிதம், வாட்ஸ்ஆப் அல்லது தொலைபேசியின் மூலமாகவோ தொடர்பு கொண்டு தெரிவிக்க விரும்புகிறோம். தங்களின் கோரிக்கைகள் மத்திய அரசிடம் நேரடியாக தெரிவிக்கப்படும். பட்ஜெட் அறிவிப்பில் நமது கோரிக்கைகள் நிறைவேறும் என்று நம்புகிறோம். **தங்கள் கோரிக்கைகளை தெரிவிக்க கடைசி நாள்: 28.12.2020.** தொடர்புக்கு: 93441 97952

நன்றி — *ஸௌ. சேம்பர் நிர்வாகம்*

18 ஆண்டு சேவை
பதிவு எண்: 16 / 2002
Ph : 0452 - 2679676, 4219676
மகாத்மா முதியோர் இல்லம்
Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்
7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.
exempt u/s 80G vide C.I.T. Madurai order in C.No.464/29/04-05/CIT-I
FCRA No. 075940608
PAN No. : AABTM1941R
A/c Name : MAHATMA'S TRUST
A/c No. : 1717115000001527
IFSC CODE : KVBL0001717 MICR CODE : 625053023
KARUR VYSYA BANK, Kamarajar Salai Br. MADURAI

E-mail : mahatma.trust@yahoo.in website : www.mahatmaoldagehome.org
ஒருநாள் நீங்களும் உதவலாமே
தங்களின் பிறந்த நாள், திருமண விழா, திருமண நாள்
பெயர் சூட்டு விழா, சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேக விழா
தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும், ரம்ஜான்
உங்கள் இல்லத்தில் நடக்கும் அனைத்து விசேஷ சுபகாரிய காலங்களிலும் எங்கள் முதியோர் இல்லத்திற்கு "நன்கொடையாகவோ (அ) உணவாகவோ" வழங்குமாறு வேண்டுகிறோம்.
"தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரி விலக்கு 80-G உள்ளது."
தொடர்புக்கு : மகாத்மா முதியோர் இல்லம்
செல் : 9786140570, 94437 23337

சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
100 YEARS SRB SINCE 1901
SRB சில்க்ஸ் பொட்டிக்
92445 00633
99433 79499
158 & 158A, தெற்கு மாசி வீதி, மதுரை – 1.
SRB Silks & Boutique
59, South Bazaar, Palayam Kottai,
Tirunelveli. Cell : 63852 13135
எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்.
SRB Silks & Boutique
Raja Annamalai Road, Saibaba Colony,
Coimbatore. Cell : 94869 29246








https://www.youtube.com/watch?v=5pWfZeFCCXc&feature=youtu.be

# இரங்கல் செய்திகள்

சௌராஷ்ட்ர சமுதாயத்தின் பேராற்றல் மிக்க மனிதர், அரசியல் புனிதர் திரு. **எஸ்.ஆர். இராதா** அவர்களின் மறைவு சௌராஷ்ட்ர சமுதாய மக்கள் அனைவரையும் வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது. சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் 2015ம் ஆண்டு ஏற்பாடு செய்த சிட்கான் தொழில் வர்த்தக மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்தவர். அதோடு, வர்த்தக கண்காட்சியை திறந்து வைத்து மாநாடு வெற்றி பெற வாழ்த்தியவர்.

2019ம் ஆண்டு நடைபெற்ற சிட்கான் தொழில் வர்த்தக மாநாட்டில், உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை மக்களிடத்தில் கொண்டு வரும் வகையில் மாரத்தான் போட்டிகளும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. மறைந்த திரு. எஸ்.ஆர். இராதா அவர்கள், உடல் உறுப்பு தானத்தின் அவசியத்தை வாழும் காலத்தில் அறிந்து வைத்திருந்தார். அத்தோடு மட்டுமல்லாமல், இறந்த பிறகும் தமது உடலை தஞ்சை மருத்துவக் கல்லூரிக்கு தானமாக அளித்துள்ளார். மறைந்த பிறகும் அவர் வாழ்கிறார். கும்பகோணத்தை பூர்வீகமாகக் கொண்ட அவரது மறைவிற்கு மதுரை வாழ் சௌராஷ்டர சமுதாய மக்களின் சார்பாக சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது. அவரது ஆன்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறது. அவரை பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறது.



**தமிழக**
**சட்டமன்றப் பேரவையில்**
**நம் சமூகத்தின்**
**ஒரே எதிர்கட்சித் தலைவராக**
**இருந்தவர்**

அவர்தம் மறைவிற்கு சேம்பரின் **இரங்கற்பா**

குடந்தை தந்த ஆற்றல் அரசனே
எம் குலம் விளங்க உழைத்தவனே
ஒப்பாரும் மிக்காரும் இல்லா ஒளிவிளக்கே
சமூகத்தின் அரசியல் அரணே
வாய்ப்புக்கடலில் மிதந்தும் வளங்களை மறுத்த பரிசுத்தமே!
தொழிற்கல்விக்கு வித்திட்ட வித்தகமே
பொன்மனச் செம்மலின் பொக்கிஷமே
மனிதத்தை மட்டுமே நேசித்த மாண்பே
மரணித்தும் தன்னையே ஈந்த மகத்துவமே
நிலமதில் நீடு வாழும் உன் புகழ் சத்தியமே.



| | |
|---|---|
| பெயர் | : T.S.S. நந்தலால் |
| சேம்பர் உறு. எண் | : SCC/L-M/460 |
| பொறுப்பு | : சிறப்பு அழைப்பாளர் |
| தொழில் | : மஞ்சுலால் பப்ளிசிட்டீஸ் |
| மறைவு | : 25.11.2020 |

நமது சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் சிறப்பு அழைப்பாளராக இருந்து வந்த திரு. T.S.S. நந்தலால் அவர்கள் 2010ம் ஆண்டு சேம்பரில் ஆண்டு சந்தா உறுப்பினராக இணைந்து பின், 2016ம் ஆண்டு ஆயுட்கால உறுப்பினராக தொடர்ந்தார்.

நமது சேம்பரின் வளர்ச்சிக்கு சேவை புரியும் நல்லெண்ணத்துடன் 2013ம் ஆண்டு சிறப்பு அழைப்பாளராக இணைந்தார்.

2013-15ம் ஆண்டு சேம்பர் நிர்வாகத்தில் வாழ்த்துக்குழுவிலும்,

2015-17 நிர்வாகத்தில் உறுப்பினர்கள் சேர்க்கைக்குழுவிலும்,

2017-19 நிர்வாகத்தில் சந்தா வசூல் குழுவிலும் இணைந்து பணியாற்றியவர்.

நடப்பு 2019-21ம் ஆண்டு நிர்வாகத்தில் உறுப்பினர் சேர்க்கைக்குழுவில் சேவை புரிந்து வருகிறார்.

இவை தவிர, சேம்பர்-ன் ஒவ்வொரு ஆண்டு விழாவிலும் குழு உறுப்பினர்களுடன் இணைந்து பல பணிகளை ஆற்றியவர்.

ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் சிட்கான் மாநாட்டில் ஏற்படுத்தப்படும் மாநாட்டு குழுவில் இணைந்து பல்வேறு விளம்பரதாரர்களையும், ஸ்டால் புக்கிங் போன்ற பணிகளிலும் ஈடுபட்டு மிகவும் உதவிகரமாக இருந்தவர்.

சேம்பர்-ன் ஒவ்வொரு கூட்டத்திற்கு தவறாது கலந்து கொள்பவர். சேம்பர் இணைந்து இந்த பத்தாண்டுகளில் இவரது சேவைகள் போற்றத்தக்கது. இவரின் மறைவு சேம்பருக்கு பேரிழப்பு. அன்னாரை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தார்க்கு சேம்பர் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது. அவரது ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.



| | |
|---|---|
| பெயர் | : திருமிகு T.K. ராஜமூர்த்தி |
| சேம்பர் உறு. எண் | : SCC/L-M/059 |
| பொறுப்பு | : ஆயுட்கால உறுப்பினர் |
| தொழில் | : ஜெயலெட்சுமி டெக்ஸ் |
| மறைவு | : 02.12.2020 |

திரு. T.K. ராஜமூர்த்தி அவர்கள், நமது சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் துவங்கிய 2007ம் ஆண்டு முதல் ஆயுட்கால உறுப்பினராக உள்ளார்.

சேம்பர் நடத்தும் சிட்கான், ஆண்டு விழா போன்ற பெரிய அளவில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு தாமாகவே முன் வந்து நன்கொடை அளித்து சேம்பருக்கு உத்வேகத்தை அளித்தது மட்டுமல்லாது, சேம்பரின் சிறப்பான செயல்பாடுகளை கருத்தில் கொண்டு ஒவ்வொரு வருடமும் சேம்பர் வளர்ச்சிக்கு நன்கொடை வழங்கி வந்தவர்.

அவரது புதல்வர் திரு. T.R. சரவணன் அவர்களையும் நமது சேம்பரின் ஆயுட்கால உறுப்பினராக இணைத்து அவரையும் சேவை பணியில் ஈடுபடுத்தியவர். (தற்போது அவர் சேம்பர் செயற்குழு உறுப்பினராகவும் மற்றும் சேம்பரால் உருவாக்கப்பட்ட **NEXTGEN** அமைப்பின் செயலாளராக இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.)

சேம்பரின் வளர்ச்சிக்கு பின்புலமாக நின்று தமது சமூக சேவைப்பணியை ஆற்றி வந்தவர். மிகச்சிறந்த தொழிலதிபர்.

இன்று நம்மோடு இல்லாதது சேம்பர் உறுப்பினர்கள் அனைவரைக்கும் மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. இவரின் மறைவு சேம்பருக்கு பேரிழப்பு.

அன்னாரை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தார்க்கு சேம்பர் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது. அவரது ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.




# சிங்கர் தையல் மிஷின்

## பெண் விடுதலை தந்த சிங்கர் தையல் மிஷின் உருவான கதை!

1850ல், அமெரிக்க பிரச்சாரகர் 'எலிசபெத் கேடி ஸ்டான்டன்' என்பவர் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டும் என்று கோரிக்கைவிடுத்து, மகளிர் உரிமை மாநாட்டில் பேசி சர்ச்சையை உருவாக்கினார். அது ரொம்ப பெரிய ஆசை என்று அவருடைய ஆதரவாளர்களே கருதினர்.

இதற்கிடையில் பாஸ்டன் நகரில், திரையில் வெற்றி பெற முடியாத ஒரு நடிகர், ஒரு கண்டுபிடிப்பாளராக ஆக தன் அதிர்ஷ்டத்தை பரிசோதித்துக் கொண்டிருந்தார்.

ஒரு பட்டறை ஷோரூமில் சிறிய இடத்தை அவர் வாடகைக்கு எடுத்திருந்தார். மரத்தில் எழுத்துக்களை செதுக்குவதற்கு தனது மெஷினை விற்பது அவருடைய திட்டமாக இருந்தது. ஆனால், மரத்தில் எழுத்துருக்களை செதுக்குவது அப்போது வழக்கொழியத் தொடங்கிவிட்டது. அந்த இயந்திரம் நுட்பமான தொழில்நுட்பம் கொண்டது. ஆனால் அதை வாங்க யாரும் விரும்பவில்லை.

நம்பிக்கை இழந்திருந்த அவரை, விற்க முடியாமல் கிடந்த தையல் மெசின்களை பார்க்கும் படி அந்த பட்டறையின் உரிமையாளர் அழைத்தார். அது சரியாக விற்கவில்லை. பல தசாப்தங்களாக பலர் முயற்சி செய்தும், அந்த மெஷினை விற்பனைக்கு ஏற்ற அளவில் யாராலும் தயாரிக்க முடியவில்லை.

தையல் பெண்மணிகளுக்கு அதிக சம்பளம் வேண்டியிராத காலம் அது. தங்கள் வேலைக்கு மிகக் குறைந்த அளவு ஊதியம் தரப்பட்டது. துணி தைக்க அதிக நேரம் தேவைப்பட்டது. ஒரு சட்டை தைக்க 14 மணி நேரம் ஆனது. எனவே வேகமாக துணி தைக்க ஏதாவது செய்ய முடியுமா என்ற தேவை அப்போது இருந்தது. தையல் பெண்மணிகளுக்கு மட்டும் தான் அந்தச் சிரமம் என்றில்லை. பெரும்பாலான மனைவியரும், மகள்களும் துணி தைக்க வேண்டும் என அப்போது எதிர்பார்க்கப்பட்டது.

பாஸ்டன் தொழிலகத்தில், கண்டுபிடிப்பாளர் அந்த மெஷினைப் பார்த்து சொன்னார், 'பெண்களை அமைதியாக வைத்திருக்கும் ஒரே விஷயத்தையும் மாற்றிவிட நீங்கள் விரும்புகிறீர்கள்' என்று கூறினார். திரையில் தோற்றுப் போய், கண்டுபிடிப்பாளராக மாறிய அந்த தான் நபர் **ஐசக் மெரிட் சிங்கர்**.

பகட்டாக உடுத்தக் கூடிய, கவர்ச்சியுள்ள மற்றும் தாராள சிந்தனை உள்ளவராகவும், அதேசமயம் கடுமையானவராகவும் இருந்தார். அவருடைய நடத்தை சில பெண்களுக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தியது என்றாலும், இயல்பாக சிங்கர் மகளிர் உரிமைகளுக்கு குரல் கொடுப்பவர்.

தையல் மெஷினுக்கான அடிப்படையான மாதிரியை சிங்கர் உருவாக்கினார். ஊடுசி வட்டமான பாதையில் அசைவதற்குப் பதிலாக, அது நேர்க்கோட்டில் முன்னும் பின்னும் செல்லும் வகையில் வடிவமைக்க விரும்புகிறேன். ஊசியின் பட்டை, வளைவான ஊசியை கிடைமட்டமாக நகர்த்துவதற்குப் பதிலாக, நேரான ஒரு ஊசி மேலும் கீழும் செல்வது போல் உருவாக்க விரும்புகிறேன் என்று தொழிலகத்தின் உரிமையாளரிடம் அவர் கூறினார்.

சிங்கர் தனது மெஷின்களுக்கு காப்புரிமை பெற்று, விற்பனை செய்யத் தொடங்கினார். அது மிகுந்த வரவேற்பைப் பெற்றது. முதலாவது வடிவமைப்பு நன்கு செயல்பட்டது. ஒரு மணி நேரத்தில் ஒரு சட்டையைத் தைக்க முடிந்தது.

துரதிஷ்டவசமாக மற்ற கண்டுபிடிப்பாளர்களால் உருவாக்கப்பட்ட மற்ற கருவிகளையும் அது சார்ந்திருக்க வேண்டியதாயிற்று. பள்ளம் உள்ள, கண் போன்ற துளையுள்ள ஊசி, முடிச்சு போடும் தையல், துணியை உள்ளே தள்ளுவதற்கான நுட்பம் கொண்டவை என பல அப்போது பயன்பாட்டில் இருந்தன.

1850-களில் தையல் மெஷின் போர் நடந்த காலத்தில், தையல் மெஷின் தயாரிப்பாளர்கள், தங்கள் மெஷின்களை

தொடர்ச்சி: பக்கம்-16

வாழ்வில் வளம் பெற!
வர்த்தகத்தில் வெற்றி பெற!!
வரம் TV
94430 34009
Google Play Store - ல் SCT app
மூலம் நேரடியாக கண்டுகளியுங்கள்...
விளம்பரங்கள் செய்து பயன் பெறுவீர்
Contact:
99408 25179
99424 17417
98421 91906
sctchannelmdu@gmail.com
GSTIN : 33ADWFS4457J1ZD

கைகளை அடிக்கடி சோப்பு தேய்த்து நன்றாக கழுவ வேண்டும்.
கைகளின் பின்பக்கம், நக இடுக்குகளிலும் கழுவ வேண்டும்.



மாண்புமிக தமிழக முதல்வர்
திரு. **எடப்பாடி பழனிச்சாமி** அவர்களிடம்
ஸௌராஷ்ட்ர சமூகம் சார்பாக முக்கிய கோரிக்கை

நமது சேம்பர் நிர்வாகிகள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. A.G.S. **ராம்பாபு**, சீதாபாய் பர்வதவர்த்தனி அம்மாள் டிரஸ்டி திரு. N.M.R.K. **ஜவகர் பாபு**, காந்தி மெமரியல் மியூசியத்தின் சேர்மன் திரு. T.R. **தினகரன்** ஆகியோர் ஒன்றாக இணைந்து, மதுரைக்கு வருகை தந்த மாண்புமிக தமிழக முதல்வர் திரு. **எடப்பாடி பழனிச்சாமி** அவர்களை ஸௌராஷ்ட்ர சமூக மக்களின் சார்பாக, நேரில் சென்று சந்தித்து மதுரை ரயில் நிலையத்திற்கு சுதந்திர போராட்டத்திற்கு போராடிய **மதுரை காந்தி** திரு. N.M.R. **சுப்பராமன்** அவர்களின் பெயரை சூட்ட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது.

“450 ஆண்டுகளுக்கு முன்பு மதுரையை ஆண்ட மன்னர் திருமலை நாயக்கர் அவர்கள், நம் ஸௌராஷ்ட்ர சமூதாய மக்களின் பட்டு நெசவின் தொழில் நேர்த்தியைக் கண்டு ஸௌராஷ்ட்ர மக்களை மதுரைக்கு அழைத்தார். தொழில் நேர்த்தி மட்டுமல்லாது, ஸௌராஷ்ட்ர சமுதாய மக்கள் சேவை மற்றும் தர்ம சிந்தனைமிக்கவர்கள். இதனை கருத்தில் கொண்டு மன்னர் அவர்கள், மதுரை நகர் மையப்பகுதியின் பல்வேறு இடங்களை தானமாக ஸௌராஷ்ட்ர சமுதாய மக்களுக்கு அளித்தார். பின் ஆங்கிலேய காலத்தில், ஆங்கிலேயர்கள் தொழில் மற்றும் மக்கள் பயன்பாட்டிற்காக ரயில் போக்குவரத்தை அமைக்க கேட்டுக்கொண்டதன் பெயரில், தமது ஸௌராஷ்ட்ர சமுதாய மக்களுக்கு சொந்தமான இடத்தை பொதுப்பயன்பாட்டிற்காக ஆங்கிலேயருக்கு அளித்தனர். அதுவே தற்போதைய மதுரை ரயில்நிலையம் அமைந்திருக்கும் இடம் ஆகும்.

தினமலர்
நாளிதழில்
09.12.2020

## ரயில்வே ஸ்டேஷனுக்கு சுப்புராமன் பெயர்

### முன்னாள் எம்.பி., வலியுறுத்தல்

**மதுரை, டிச.9–**

விடுதலைக்காக போராடியதில் 'மதுரை காந்தி' எனப்படும் என்.எம்.ஆர். சுப்புராமன் பெயரை மதுரை ரயில்வே ஸ்டேஷனுக்கு சூட்ட முன்னாள் எம்.பி., ராம்பாபு முதல்வர் பழனிசாமியிடம் வலியுறுத்தினார்.

இதுகுறித்து ராம்பாபு கூறியதாவது:

சுப்புராமன் வீடு, நிலம், செல்வம் என அனைத்தையும் விடுதலைக்காக அர்ப்பணித்தவர்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பாடுபட்டார். அவரது பெயரை ரயில்வே ஸ்டேஷனுக்கு சூட்ட முதல்வர் வழிகாட்டுதல் படி மாநில உள்துறை செயலாளர் பரிந்துரைக்க வேண்டும் என மத்திய ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கர்நாடகா ஹூவேரி ரயில்வே ஸ்டேஷனுக்கு விடுதலை வீரர் மகா தேவப்பா மைலாரா பெயர் வைக்க அம்மாநில அரசு பரிந்துரைத்தது. தமிழக அரசும் பரிந்துரைக்க வேண்டும், என்றார்.

சவுராஷ்டிரா தொழில் வர்த்தக சங்க தலைவர் குமரன் பி. ஜகுவாவும் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய விடுதலைக்காக போராடிய நம் ஸௌராஷ்ட்ர சமூகத்தின் முக்கியப் பிரமுகரான திரு. N.M.R. சுப்பராமன் அவர்களை, **மதுரை காந்தி** என்று மதுரை மக்கள் செல்லமாக அழைக்கின்றனர். அவர், ஆங்கிலேயர்களை எதிர்த்து மதுரையில் பல்வேறு அறப்போராட்டங்களை நிகழ்த்தியவர். மேலும், தீண்டாமை விலக்கு, பூதான போராட்டம் போன்ற போராட்டங்களில் பங்குகொண்ட முக்கியஸ்தர் ஆவார். மதுரையில் நடைபெற்ற சுதேசி இயக்கப் போராட்டதிற்கு தலைமை தாங்கி நடத்திச்சென்றவர். 1935ல் மதுரை நகராட்சித் தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டவர். ஆன்மிகச் சிந்தனையும், அரசியல் தெளிவும், பல தான தர்மங்களை செய்தவர். தற்போது மதுரையில் இயங்கி வரும் மதுரை பல்கலைக்கழகம் இடமானது இவர் வழங்கியதே ஆகும். இவைகளை கருத்தில் கொண்டு மதுரை ரயில் நிலையத்திற்கு நம் சமுதாயத்தினரின் முன்னோடி ஒருவரின் பெயரை, அதுவும் **மதுரை காந்தி** N.M.R. சுப்பராமன் அவர்களின் பெயரே பொருத்தமானது என்று அவரது பெயரை சூட்ட கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

**K.D. பத்மினி**
(A to Z Arrangements) அவ்த்த லவி பூல் தேரியோ ※ வரவேற்பு அமைப்பாளர்
சத்குரு ஸரணம் சரணம்
98946 71401 99426 71819
63819 26819 90255 17366
# பத்மினி ஈவன்ட்ஸ்

★ திருமணம் ★ நலுங்கு ★ நிச்சயதார்த்தம் ★ வளைகாப்பு ★ பிறந்த நாள் ★ பலூன் ★ ஷஷ்டியப்த பூர்த்தி ★ புதுமனை புகுவிழா மற்றும் சுப வைபவங்களுக்கு
★ புஷ்பம் ★ மேடை அலங்காரம் ★ கிப்ட் பேக்கிங் ★ கேட்டரிங் மற்றும் ★ பத்திரிக்கை அச்சடித்தல் ★ ஹனிமூன் & டூர் பேக்கேஜ் (உள்நாடு, வெளிநாடு)
மேற்கண்ட வேலைகள் அனைத்தும் சிறப்பாக அமைத்து தரப்படும்.
5-A, பழைய இங்கிலீஷ் கிளப் சந்து, காமராஜர் சாலை, மதுரை-9.



நமது பாரதப்பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களின் சகோரர்
திரு. **பிரகலாத் மோடி** அவர்களுடன் சந்திப்பு

மதுரைக்கு வருகை தந்த நமது பாரதப்பிரதமர் **நரேந்திர மோடி** அவர்களின் சகோரரும், பிரதான் மந்திரி ஜன் கல்யாண்கரி யோஜ்னா அமைப்பின் தேசியத் தலைவருமான திரு. **பிரகலாத் மோடி** அவர்களை நமது சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்தனர். அவரிடம் சேம்பர் குறித்தும், நமது ஸௌராஷ்ட்ரா சமூகம், தொழில் குறித்தும் பகிர்ந்து கொள்ளப்பட்டது. மதுரை வாழ் ஸௌராஷ்ட்ர மக்களின் கோரிக்கைகளை தங்களுக்கு அனுப்பும்படியும், அதற்கு தம் அமைப்பின் மூலம் தேவையான உதவிகள் அளிக்கப்படும் என்றும் தெரிவித்தார். இந்த சந்திப்பில் இளைய தொழில் முனைவோர் அமைப்பான **NEXTGEN** நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். இந்த சந்திப்பிற்கு காரணமாக இருந்த நமது சேம்பர் உறுப்பினர் மெட்ரிக் மெஷின் கோ. உரிமையாளர் திரு. K.R. **ராஜேந்திரன்** அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.





தமிழ்நாடு மஹா ஸௌராஷ்ட்ர ஸபா **கிளை திறப்பு விழா**

கடந்த 29.11.2020 அன்று **தமிழ்நாடு மஹா ஸௌராஷ்ட்ர ஸபா**, கைத்தறிநகர் கிளை பொறுப்பாளர்கள் பதவியேற்பு விழா & செயல்பாடுகள் துவக்கவிழா நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தது.

இந்த அமைப்பு, திருமண தகவல் சேவை, வேலை வாய்ப்பு சேவை, ஸௌராஷ்ட்ர மொழி & அரசு போட்டி தேர்வுக்கான நூலகம் & தேர்வுக்கான பயிற்சி மையம், ஸௌராஷ்ட்ர மொழி பயிற்சி மையம், சுய தொழில் பயிற்சி மையம் மற்றும் கராத்தே பயிற்சி வகுப்புகள் ஆகியவைகளை கைத்தறி நகர் கிளையில் புதிதாக தொடங்கப்பட்டது.

இதில், சுய தொழில் பயிற்சி மைய திறப்பிற்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-க்கு அழைப்பு விடுத்திருந்ததை ஏற்று நிர்வாகிகள் கலந்து கொண்டனர். தொழில் பயிற்சி மையத்தை ஸௌ. சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. **தினேஷ்** அவர்கள் திறந்து வைத்தனர்.

இந்த அமைப்பின் தலைவர் திரு. R.K. **பாஸ்கர்** அவர்களின் தலைமையில் இந்த விழா நடைபெற்றது. விழாவில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. A.G.S. **ராம்பாபு**, பவர் கிரிட் கார்ப்பரேசன், தமிழ்நாடு டைரக்டர் திருமதி. A.R. **மகாலட்சுமி** அவர்களும், நிலையூர் N.K. குப்பையன் ரத்தினாமணி பள்ளியின் செயலாளர் திரு. T.L. **ஹரிஹரன்**, சமூக முக்கிய பிரமுகர் மற்றும் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.




சிறந்த தையல் !
குறைந்த விலையில் !

நீடித்த உழைப்பு தரும் !!
ஒரே விலையில் !!

# ரேவதீஸ் டெக்ஸ்

பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்

1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223


கைகளை அடிக்கடி சோப்பு தேய்த்து நன்றாக கழுவ வேண்டும்.
கைகளின் பின்பக்கம், நக இடுகுகளிலும் கழுவ வேண்டும்.

விற்பதைவிட பிற தயாரிப்பாளர்கள் மீது காப்புரிமை மீறியதாக வழக்குப் போடுவதில்தான் அவர்கள் தங்கள் நேரத்தை செலவிட்டுக் கொண்டிருந்தனர். கடைசியில் ஒரு வழக்குரைஞர் அவர்களை ஒன்று சேர்த்தார்.

ஒரு நல்ல தையல் மெஷினை உருவாக்குவதற்குத் தேவையான அனைத்து அம்சங்களும் நான்கு தரப்பினரிடம் இருந்தன. அவற்றுக்கு லைசென்ஸ் வாங்கி ஒன்றாக பயன்படுத்தி ஏன் தைக்கக் கூடாது என யோசித்தார். சட்டப் போராட்டங்களில் இருந்து விடுபட்டு, தையல் மெஷின் மார்க்கெட் சூடு பிடித்தது. அதில் சிங்கர் ஆதிக்கம் செலுத்தியது.

போட்டியாளர்களைவிட அவருடைய தொழிற்சாலைகள் எப்படி வித்தியாசமாக இருந்தன என்பது பலருக்கும் ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது. தனிப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி, மாற்றிக் கொள்ளக் கூடிய பாகங்களைக் கொண்டதாக இருந்த 'அமெரிக்க முறையிலான' மெஷின் என்ற வகையில் மற்றவர்கள் தயாரித்தனர். அப்போது இந்த நடைமுறைக்கு சிங்கர் மாறுவதற்கு தாமதமானது.

கைகளால் தயாரிக்கப்பட்ட பாகங்களையும், கடைகளில் வாங்கப்பட்ட போல்ட், நட்களையும் கொண்டு அவருடைய மெஷின்கள் தயாரிக்கப்பட்டன.

ஆனால், சிங்கரும், அவருடைய வர்த்தக பங்காளர் எட்வர்ட் கிளார்க்கும் வேறொரு வழியில் முன்னோடிகளாக இருந்தனர். சந்தைப்படுத்துதலில் அவர்கள் கை தேர்ந்தவர்கள்.

தையல் மெஷின்கள் விலை அதிகமாக இருந்தது. சராசரி குடும்பம் பல மாதங்களாக சேமித்தால் தான் அதை வாங்க முடியும் என்றிருந்தது. மெஷின்களை தவணை கட்டணத்தில் அளிக்கும் திட்டத்தை கிளார்க் முன்மொழிந்தார். முந்தைய ஆண்டுகளில் இருந்த, மெதுவாக தைக்கக்கூடிய, அதிகம் நம்பியிருக்க முடியாத மெஷின்களில் இருந்து அவர்கள் விடுபடுவதற்கு இது உதவிகரமாக இருந்தது.

சந்தைப்படுத்தலில் ஒரு பிரச்சினை இருந்தது. பெண்ணின் வெறுப்பு என்ற ரூபத்தில் பிரச்சினை வந்தது. இதற்கு இரண்டு கார்டூன்களை ஸ்டான்டன் உருவாக்கினார். "ஒரு தையல் மெஷினை உங்களால் திருமணம் செய்து கொள்ள முடியும்" என்ற நிலையில், "ஏன் தையல் மெஷினை வாங்குகிறீர்கள்" என்று ஓர் ஆண் கேட்பது போல ஒரு காட்டூன் இருந்தது. "பெண்கள் தங்களது அறிவை வளர்த்துக் கொள்ள கூடுதல் நேரம் கிடைக்கும்" என்று விற்பனையாளர் சொல்வது போல இன்னொரு கார்ட்டூன் இருந்தது. அதில் சொல்ல வந்த விஷயம் புரிந்து கொள்ளப்பட்டது.

தன் சொந்த வாழ்க்கையில் பெண்களை எந்த அளவுக்கு மரியாதைக் குறைவாக நடத்தியிருந்தாலும், இந்த மெஷினை பெண்கள் பயன்படுத்தலாம் என்பதை நிரூபிப்பதில் தான் அவருடைய வியாபாரம் சார்ந்திருந்தது.

முடிவெடுக்கும் நபர்களாக பெண்கள் உருவாகலாம் என்பதாக சிங்கரின் விளம்பரங்கள் இருந்தன. தயாரிப்பாளரால் நேடியாக குடும்பத்தின் பெண்களுக்கு விற்கப்படுகிறது என்று விளம்பரம் செய்தார். பெண்கள் நிதி சுதந்திரம் பெற ஆசைப்பட வேண்டும் என்ற அர்த்தத்தை அது உருவாக்கியது. நல்ல பெண் தையல் தொழிலாளி ஆண்டுக்கு ஆயிரம் டாலர் சம்பாதிக்க முடியும் என்று விளம்பரம் செய்தார்.

வேறு எந்த கண்டுபிடிப்பும் நமது தாய்மார்கள் மற்றும் மகள்களுக்கு இவ்வளவு பெரிய விடுதலையை அளிக்கவில்லை என்று நியூ யார்க் டைம்ஸ் பத்திரிக்கை புகழ்ந்தது. பெண்மணிகள், குறைவான உழைப்பில், நல்ல வருமானத்தை ஈட்டத் தொடங்கினர்.

**மிக உயர்வான சுய அக்கறையுள்ள உந்துதல்களால் சமூக முன்னேற்றத்தை முன்னெடுக்க முடியும்** என்பதற்கு அவர் நிரூபணமாக இருக்கிறார்.

– இதழ்குழு



ஸ்ரீ குமரன் ஆப்டிகல்

கம்ப்யூட்டர் கண் பரிசோதனை செய்யப்படும்.
கண்களில் காண்டாக்ட் லென்ஸ் பொருத்தப்படும்.

கண் பரிசோதனை இலவசம்

Computer Eye Testing Available Here

134, பாண்டிய வேளாளர் தெரு, மதுரை - 1. செல்: 98420 69421, 99522 21781



O.V.K. பாஸ்கரன்

TRC

தரமான டைல்ஸ்கள், சரியான விலையில்
மன நிறைவுடன் வாங்க...

ரிஜென்சி டிரேடிங் கம்பெனி

5, பெசன்ட் ரோடு, PTR கல்யாண மகால் பின்புறம்,
சொக்கிகுளம், மதுரை–625 002.
செல் : 73737 21281, 98428 21281, 99449 05051

அனைத்து முன்னணி கம்பெனி டைல்ஸ் & சானிட்டரிவேர்ஸ்



V.K. ஜெயசங்கர்



# சிகப்பரிசி எனும் மட்டை அரிசியின் மகிமை

இன்று கேரள மக்களால் அதிகளவில் உண்ணப்படும் சிகப்பரிசியின் (ப்ரவுண் ரைஸ், மட்டை அரிசி) பிறப்பிடம் தமிழகத்தில் குறிப்பாக மதுரையில் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்.

1982-ல் 'இங்கிலாந்து ஹெல்த் யுனிவர்சிட்டி' இந்தியாவில் ஒரு ஆய்வை மேற்கொண்டது. இந்தியாவில் அதிக வாழ்நாள் கொண்ட மக்கள் வாழும் இடம் எது? எப்படி?. இரண்டு வருட ஆய்வின் முடிவில் கண்டுபிடிக்கப்பட்ட மாவட்டம் **மதுரை**.

மதுரை மக்கள் நீண்ட ஆயுளுடன் வாழ்வது கணக்கிடப்பட்டது. என்ன காரணம்? அங்கு விளைவிக்கப்பட்ட **சிகப்பரிசி** எனும் அரிசி வகைதான் காரணம். அதையே உட்கொண்டதுதான் காரணம் என்பதை ஆய்வின் முடிவில் அறிந்தனர்.

சிகப்பரிசி, உரம் தேவையில்லை. இயற்கையாக இருக்கும் ஒருவகை ஆண்டி ஆக்சிடண்ட் காரணமாக பூச்சிகள் நெருங்குவதில்லை. எனவே பூச்சி மருந்து அவசியமில்லை. தண்ணீர் மற்றவைகளை விட குறைந்த அளவு போதுமானது. விளைச்சல் சாதாரண அரிசியை விட நான்கு மடங்கு அதிகம்.

**மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று,**

**யானை கட்டி போரடித்த அழகான தென்மதுரை**

என இலக்கியம் பேசுகிறது இந்த அரிசியை பற்றி. யானை மிதித்து நெல் எடுக்கும் அளவுக்கு விளைச்சல் அதிகமாம்.

கவளம் என்றால் (யானைக்கு தரப்படும் ஒரு வாய் உருண்டை உணவு 1 கவளம் ஆகும். ஒரு ஃபுட்பால் அளவு). ஒரு வேளைக்கு யானை 8 முதல் 12 கவளம் தரப்படும். ஆனால் மதுரையில் சிகப்பரிசியில் செய்த 4 கவளம் யானைக்கு போதுமானதாம். நார்ச்சத்து மிக அதிகம். நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது. செம்மண்ணில் விளைந்த ஒரு பொக்கிஷம்.

எனவே தான் இன்றும் மதுரையில் 90 வயதுக்கு மேல் வீட்டுக்கு ஒரு பாட்டி ஐம்புலன்களும் நன்கு செயல்பட உழைத்துக் கொண்டிருக்கும். வயதளவில் மட்டும் வயதானவர்களை இன்றும் மதுரையில் காணலாம். அவர்களுக்கு சுகர் என்றால் என்னவென்றே தெரியாது. இரத்தக்கொதிப்பா அப்டினா என்பார்கள். தைராய்டு-னா சாப்பிடும் தயிரா என்பார்கள். குறைந்தது 6 முதல் 12, 15 பிள்ளைகள் பெற்றிருப்பார்கள். பிறந்த குழந்தைக்கு தடுப்பூசி போடும் வழக்கம் கிடையாது. மருத்துவமனை இன்று வரை செல்லாதவர்கள் அவர்கள்.

நம் பாரம்பரியத்தை மறந்ததால் நாம் இன்று மருத்துவமனையையே கதியாய் இருக்கிறோம். தாய் வீட்டில் பிறந்ததால் முன்பு அடிக்கடி பிறந்த வீடுகளுக்கு சென்று அங்கு விளைந்ததை பெருமைக்காக வாங்கி வந்த பரம்பரை. இன்று மருத்துவமனையில் பிறந்ததால் அடிக்கடி பிறந்த வீடான மருத்துவனை சென்று அங்கிருந்து மருந்துகளை வாங்கி வந்து உட்கொள்ளும் அவலம் இந்த பரம்பரையில் மாறிவிட்டது நம் அவலநிலை.

சிகப்பரிசி இன்றும் கிடைக்கிறது. விலை 80 ரூபாய் வரை. மீண்டும் இதையெல்லாம் அதிகளவு விளைவிக்க அரசுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மனிதனின் ஆயுள் பொதுவாக 120. ஒவ்வொருவரும் 40 வருடங்கள் என 40×3=120. மூன்று தலைமுறை கண்டவர்கள் நம் முன்னோர்கள். 120 வருடங்கள் நம் பாட்டனும் பூட்டனும் வாழ்ந்திருக்கிறார்கள். வாழ்ந்தது போதும் என தானாகவே வடக்கிருந்து (தனக்காக ஒரு சமாதி கட்டி வடக்கு நோக்கி அதில் அமர்ந்து இறை சிந்தனையில் மூச்சை அடக்கி உயிர் துறத்தல்) உயிர் விட்டவர்கள் ஏராளம். நம் ஆயுள் நீட்டித்துக்கொள்ள சிகப்பரிசியை முடிந்தவரை பயன்படுத்துவோம்.

Source: www.thagavalkalanjiyam.com


ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE



Cell: 90805 54802, 99424 90217

Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

அனைவரும் பயன்படுத்தக்கூடிய கதவின் கைப்பிடி, தொலைபேசி போன்ற பொருட்களை கிருமி நாசினி கொண்டு அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும்.



# தொழில் முனைவோர் என்பவர் யார்?

## இருக்க வேண்டிய குணங்கள்!

யாரிடமும் கைகட்டி சேவகம் செய்யாமல் தன்னார்வத்துடன் ஏதேனும் ஓர் தொழிலை தொடங்கி அதை திறம்பட நிர்வகிப்பவரே தொழில்முனைவோர் ஆவார். தொழிலை நடத்துவதில் உள்ள கஷ்டங்கள் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய உறுதியற்ற நிலையை துணிச்சலுடனும் சவாலுடனும் ஏற்றுக்கொள்பவர். எந்தத் தொழிலையும் துவங்குவதற்கான வாய்ப்புகளை முன்பே அறிந்து அவற்றை மதிப்பீடு செய்து தொழில் துவக்கத்திற்கு தேவைப்படும் அனைத்து காரணிகளையும் சேகரித்து வெற்றி பெறத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்பவர். புதியனவற்றைக் கண்டறிந்து புதுமையினை செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு உற்பத்திக்கான ஏற்பாடுகள் செய்து, இடர்பாடுகளை எதிர்கொண்டு பொருளாதார உறுதியற்ற நிலையை ஆராய்ந்து வெற்றி கொள்பவர். மாறுதல்களை தேடிச்சென்று அவற்றை வாய்ப்பாகப் பயன்படுத்துபவர். தொழிலை ஒழுங்கமைத்து நிர்வாகம் செய்து, இடர்பாடுகளை எதிர்கொண்டு இலக்கை அடைய அனைத்து முயற்சிகளையும் எதிர்கொள்பவர்.

